பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 08 2026 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வளர்ச்சியும், வனப் பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- நாடு முழுவதும் 410 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரயில் வழித்தடம் அமைக்கும் திட்டம், ரயில்வே துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.
- தில்லியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க, கால அவகாசம் வரும் 24ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- பங்களாதேஷில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று நடைபெறுகிறது.
- துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சி மற்றும் வனப் பாதுகாப்பு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல என குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் இந்திய வனப்பணி பயிற்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வனப்பாதுகாப்பு மற்றும் சூழலியல் பாதுகாப்பு என்பது வருங்கால சந்ததியினரின் நலன்களை கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், அவற்றுக்கு இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தொலை உணர்வுக் கருவிகள், ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு சார்ந்த அமைப்புகளுடன் வனத்துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாடு முழுவதும் 410 கிலோ மீட்டர் தொலைவுக்கு பன்முக ரயில் வழித்தடம் அமைக்கும் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், 9 ஆயிரத்து 450 கோடி ரூபாய் முதலீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள இந்த திட்டங்களின் மூலம் சுமார் 6 ஆயிரத்து 400 கிராமங்களுக்கு போக்குவரத்து இணைப்பை மேம்படுத்த முடியும் என்றும், சுற்றுலா மற்றும் சரக்கு கையாளும் திறன் அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளார்.

இந்த ஒப்புதல் மூலம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரயில்வே துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று, செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளம், தெலங்கானா மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் புதுச்சேரி முதலமைச்சர், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

இதில் கலந்துகொள்வதற்காக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நேற்றிரவு சென்னை வந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் கோவளத்தில் உள்ள தனியார் விடுதியில் திரு. அமித் ஷாவை தமிழக முதலமைச்சர் திரு. விஜய் சந்தித்துப் பேசினார்.

இந்த மாநாட்டை ஒட்டி, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியில் இன்று ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் Shinjiro Koizumi-யை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத் துறையில் நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு

மற்றும் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்துவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கடலோர பாதுகாப்பில் ஒத்துழைப்பு குறித்த கருத்துகளையும் இரு தலைவர்களும் பரிமாறிக்கொள்வார்கள் என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் நேற்று மும்பையில் கடற்படை தளத்தை பார்வையிட்டு, கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் கிருஷ்ண சாமிநாதன் மற்றும் கடற்படை உயரதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

தில்லியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க, கால அவகாசம் வரும் 24ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் வரைவு அறிக்கை வரும் 31ஆம் தேதி வெளியிடப்படும் என்று தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் தங்களின் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கு அடுத்த மாதம் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

இதைத் தொடர்ந்து நவம்பர் 4ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலத்தின் பிஜப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சாலை வசதி மற்றும் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதால், மக்கள் பாதுகாப்புடன் உள்ளனர்.

மத்திய ரிசர்வ் காவல் படையினருக்கும், போக்குவரத்து வசதி எளிதாக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் தங்களால் சுலபமாக பயணிக்க முடிகிறது என்று CRPF உதவி ஆய்வாளர் சக்திவேல் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங் அர்மேனியாவில் தமது இரண்டு நாள் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

அவரது இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் Karen Brutyan, ராணுவ தலைமைத் தளபதி Edward Asryan ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

அர்மேனியாவுடன் ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இருதரப்பு பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து திரு. ராஜேஷ் குமார் சிங் ஆலோசனை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பரிமாறிக்கொள்வது குறித்தும் பேச்சுகள் அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு ஈரான் நாட்டுக்கு பல வாய்ப்புகளை அமெரிக்கா வழங்கியபோதிலும், அவை தோல்வியில் முடிந்ததாக கூறியுள்ளார்.

எனவே ஈரானை தனிமைப்படுத்தும் வகையில் தீவிர பொருளாதார தடை நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு உதவும் நாடுகளுக்கு எதிராகவும் பொருளாதார தடை நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

பங்களாதேஷில் அதிபர் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

பங்களாதேஷ் தேசிய கட்சியின் தலைவர் Mirza Fakhrul Alamgir-க்கும், ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி Oli Ahmed தலைமையிலான 11 கட்சிக் கூட்டணிக்கும் இடையே இந்த தேர்தலில் போட்டி நிலவுகிறது.

35 ஆண்டுகளுக்குப் பின்னர் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

பங்களாதேஷ் நாடாளுமன்ற வளாகத்தில் பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு 5 மணி வரை நடைபெறும் என்று அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் பிரதமர் பதவியில் இருந்து விலகிய திருமதி ஷேக் ஹசீனாவுக்கு நெருக்கமானவரான முகமது ஷஹாபுதீன் கடந்த மாதத்தில் அதிபர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, தற்போது அங்கு தேர்தல் நடைபெறுகிறது.

<<<<>>>>

துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி, பெனால்டி சூட்-அவுட் முறையில் 5-3 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இன்று நடைபெறும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் மோகன் பஹான் அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி வீரர்கள் தொடக்கத்தில் இருந்தே அடுத்தடுத்து கோல்கள் போட்டனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்திய ஹாக்கி அணியின் வெற்றிக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே உலகக் கோப்பை ஹாக்கி மகளிர் பிரிவில் இந்திய அணி இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 6.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>